# நேரலை நாடகங்கள்: நடுநிலை காத்தாரா சபாநாயகர்?

நிதிநிலை அறிக்கை மற்றும் மானியக் கோரிக்கைகள் மீதான சட்டமன்றக் கூட்டத்தொடர் ஒரு மெகா சீரியலைப் போல நடந்து முடிந்திருக்கிறது. மெகா சீரியல்களில் சண்டை இருக்கும்; சென்டிமென்ட் இருக்கும்; லாஜிக் மட்டும் இருக்காது. அத்தகையதொரு சீரியலைத்தான் ஆளுங்கட்சியின் ஆதரவோடு சபாநாயகர் நடத்திக் காட்டியிருக்கிறார்.

சட்டமன்ற நிகழ்வுகளை நேரலை செய்து ஜனநாயகத்தை நிலைநாட்டி விட்டதாகத் த.வெ.க.வினர் மார்தட்டிக் கொண்டார்கள். ஆனால், சட்டப்பேரவையை அவதூறு மன்றமாக்கி, பொய்களைப் படம்பிடித்துப் பரப்பும் ஒரு 'ரீல்ஸ்' மேடையாகப் பயன்படுத்தவே இந்த நேரலை உதவி இருக்கிறது.

தான் நடுநிலையாகச் சபையை நடத்துவதாக ஒரு பிம்பத்தை உருவாக்கச் சபாநாயகர் படாதபாடுபட்டார். சில ஊடகவியலாளர்கள்கூட அந்தப் பிம்பத்தை நம்பி வானளாவிய அதிகாரம் கொண்டவருக்கு வான்புகழ் பாடினர். ஆனால், அந்த நடுநிலை முகமூடி கூட்டத்தொடரின் கடைசி இரண்டு நாட்களிலும் முழுமையாகக் கழன்று விழுந்தது. த.வெ.க. என்னும் நாடகக் கம்பெனியின் இயக்குநராகவே அவர் செயல்பட்டார்.

## 'இழி சைகை'க்கு அனுமதி:

"சட்டமன்றத்தில் யாரும் சைகை மொழிகளையும் முகபாவனைகளையும் காட்டக் கூடாது" என ஜூன் 22ஆம் தேதி கண்டிப்புடன் கூறிய சபாநாயகர், ஜூன் 23ஆம் தேதி சட்டசபையில் தி.மு.க. தலைவர் குறித்து இழி சைகை செய்த போது ஏன் அதைக் கண்டிக்கவில்லை?

"மற்ற உறுப்பினர்களும் அவ்வாறு சைகை செய்யலாமா?" என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது, "முதல்வர் விஜய் சைகை காட்டியதில் எந்தத் தவறும் இல்லை; அது விதிகளுக்கு உட்பட்டுத்தான் நடந்திருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ன சைகை காட்டப் போகிறார்கள் என்று எனக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தால், அதை அனுமதிப்பதா வேண்டாமாஎன்றுநான்முடிவெடுப்பேன்" என்றார்.

"முதல்வர் விஜய் உங்களிடம் முன்கூட்டியே என்ன சைகை காட்டப்போகிறேன் என்று கூறினாரா?" என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "முதல்வரின் கை அசைவைப் பார்த்து, அவர் என்ன செய்யப்போகிறார் என்று புரிந்துகொண்டு அனுமதி அளித்தேன்" என்றார் சபாநாயகர்.

**சபாநாயகர் ஆரம்பம் முதலே முதல்வர் விஜய்க்கு அடிபணிந்தும், அவருக்குச் சட்டமன்றத்தில் எந்த நெருக்கடியும் வந்துவிடக் கூடாது எனத் திட்டமிட்டும் முரண்பாடான நிலைப்பாடுகளை எடுத்துவந்தார் என்பதற்கு இதுவே முதல் சாட்சியம். இதன் தொடர்ச்சியாகவே தி.மு.க. தலைவர் குறித்த இழி சைகை ஒன்றை மீண்டும் முதல்வர் விஜய் சட்டசபையில் செய்தார்.**

**அன்று கலைஞர் சக்கர நாற்காலியில் வருவதைக் குறிப்பிட்டுத் 'தள்ளுவண்டி' எனக் கேலி செய்த விஜயபாஸ்கருக்கு, அடுத்த நாளே அமைச்சர் பதவி கொடுத்து அழகு பார்த்தார் ஜெயலலிதா. இன்று மிசாவின் போது தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தாக்கப்பட்டதைக் கேலி செய்து, தாடையைக் கோணி இழி சைகை காட்டுகிறார் முதல்வர் விஜய்.**

**அரசியலில் அறம் பிழைத்தோர்க்குக் காலம் வழங்கும் நீதி மிகவும் கடுமையாக இருக்கும்.**

## 'நீக்கம்' என்ற நாடகம்:

ஒரு பேச்சு அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுவது என்பது, அந்தப் பேச்சு அவையின் மாண்புகளுக்கும் மரபுகளுக்கும் ஒவ்வாதது என்றோ, உண்மைக்குப் புறம்பாக இருக்கிறது என்றோ சபாநாயகர் கருதினால் மட்டுமே.

அவைக்குறிப்பு என்பது சட்டசபை நிகழ்வுகள் குறித்த அதிகாரபூர்வ ஆவணம். தவறான சொற்களோ கருத்துகளோ அவைக்கு வெளியே செல்லக் கூடாது என்பதற்காகவே அவைக்குறிப்பிலிருந்து நீக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஊடகங்கள் அந்தச் செய்தியை வெளிப்படுத்தாது. இதுதான் மரபு.

ஆனால், சட்டசபை நிகழ்வுகள் முழுமையாக நேரலை செய்யப்படும்போது, 'அவைக்குறிப்பிலிருந்து நீக்குதல்' என்பதே அர்த்தமற்றதாகிவிடுகிறது. இதை முதல்வர் விஜய்யும் த.வெ.க.வினரும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். சட்டசபை நேரலை மூலமாகப் பொய்களும் அவதூறுகளும் பரப்பப்பட்டு, அவை 'ரீல்ஸ்'களாக மாறி இணையத்தில் பெருகிய பிறகு, 'அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்' என்ற சடங்கை சபாநாயகர் மேற்கொண்டார்.

**நேரலை ஒளிபரப்பைச் சில நொடிகள் தாமதித்து வழங்குவதன் மூலம்** (Delay Broadcast), **அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை நேரலையிலும் நீக்குவது இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் மிகவும் எளிது. ஆனால், சபாநாயகர் இந்தக் கோரிக்கையைக் கண்டுகொள்ளவே இல்லை. நோக்கம் வேறாக இருக்கும் போது எப்படிக் கண்டுகொள்வார்?**

## கார்ட்டூன் டப்பிங் குரல்கள்;

சட்டசபையில் முதல்வர் பேசும் நாட்களில் எல்லாம் யாரும் எந்தக் கேள்வியும் கேட்டுவிடக் கூடாது என்பதற்காகக் கேள்வி நேரம் நீக்கப்பட்டது. யாரும் குறுக்கிட்டுப் பேச முடியாதபடி 110வது விதியின் கீழ்தான் முதல்வர் பேசுவார். ஆனால், எதிர்க்கட்சித் தலைவரோ மற்ற தி.மு.க. உறுப்பினர்களோ பேசும்போது ஆதவ் அர்ஜூனாவும், நிர்மல் குமாரும், ராஜ்மோகனும் குறுக்கிட்டுப் பேசித் திசை திருப்புவதற்குச் சபாநாயகர் தொடர்ந்து அனுமதியளித்தார்.

எந்த அமைச்சரின் துறை சார்ந்த கேள்வி கேட்கப்பட்டாலும் இவர்கள் மூவரும்தான் பதிலளிப்பார்கள். கார்ட்டூன் படங்களில் பல்வேறு கதாபாத்திரங்களுக்கும் ஒரு சிலரே டப்பிங் குரல் கொடுப்பதைப் போல இது இருந்தது.

இது சுட்டிக்காட்டப்பட்டபோது, "இனி துறை சார்ந்த அமைச்சர்கள்தான் பதிலளிக்க வேண்டும்; ஒருவர் பேசி முடிக்கும் வரை யாரும் குறுக்கிடக் கூடாது" என்று அவ்வப்போது அறிவுறுத்துவார் சபாநாயகர். ஆனால், அதை அவர் ஒருநாளும் நடைமுறைப்படுத்தவில்லை.

## குழப்பம் விளைவித்தது யார்?

**தி.மு.க.வினர்தான் கூச்சல் குழப்பம் ஏற்படுத்துகிறார்கள் என்ற பிம்பத்தைச் சபாநாயகர் திரும்பத் திரும்ப ஏற்படுத்தினார். கூட்டத்தொடரின் கடைசி இரண்டு நாட்களும் சபாநாயகர் இதை முழுமூச்சாகச் செய்தார்.**



**மனுஷ்ய புத்திரன்,**
மாநில ஆலோசகர்,
தகவல் தொழில்நுட்ப அணி. தி.மு.க.

**காவல்துறை மானியக் கோரிக்கையில், எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல்—மிசாவில் தி.மு.க. தலைவர் கைது செய்யப்பட்டது தொடர்பான பொய், அமலாக்கத்துறை அறிக்கையை ஏதோ உண்மை ஆவணம் போல வாசித்தது, சர்க்காரியா கமிஷன் தொடர்பான பொய், முரசொலி மாறன் மீதான அவதூறு எனச் சம்பந்தமே இல்லாமல் விஜய் வன்மத்தைக் கக்கிக்கொண்டிருந்தார். தி.மு.க.வினர் இதற்குப் பதிலளிக்கவோ விளக்கம் அளிக்கவோ சபாநாயகர் அனுமதியளிக்கவில்லை.**

**முதல்வரின் இந்தத் தாக்குதலுக்கு எதிர்வினையாற்றத் தி.மு.க. உறுப்பினர்கள் முயன்றால், அது சட்டமன்ற நிகழ்வுகளைச் சீர்குலைக்கும் முயற்சியா? முதல்வர் பொய் சொல்லலாம், ஆனால் அந்தப் பொய்க்கு யாரும் மறுப்புத் தெரிவிக்கக் கூடாது என்றால், சபாநாயகர் என்ற பதவிக்கு ஜே.சி.டி. பிரபாகர் என்ன நியாயம் செய்திருக்கிறார்?**

## மாண்பு மீறல்கள் - மரபு மீறல்கள்;

கூட்டத்தொடரின் கடைசி நாளில், முந்தைய தினம் முதல்வர் சொன்ன பொய்களுக்கு எதிராக எ.வ. வேலு பேச முற்படுகிறார். உடனே, "அதுசம்பந்தமான விவரங்களுக்குள் போகாதீர்கள்" எனச் சபாநாயகர் பதற்றமாகத் தடுக்கிறார்.

தி.மு.க. வைத்த கோரிக்கை ஒன்றே ஒன்றுதான்: "நீதிமன்ற விசாரணையில் இருக்கும் அமலாக்கத்துறை வழக்கு விவரங்களை முதல்வர் சட்டசபையில் வாசிப்பது அவை மரபுக்கு எதிரானது. அதேபோல மிசாவில் தி.மு.க. தலைவர் கைது செய்யப்பட்டது குறித்தும், சர்க்காரியா கமிஷன் தொடர்பாகவும் முதல்வரும் அவரது அமைச்சர்களும் பேசியவை ஆதாரமற்ற அவதூறுகள். எனவே, அவற்றை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்" என்பதுதான்.

ஆனால், "முதல்வர் பேசியதெல்லாம் பொதுவெளியில் இருப்பவை; அதைப் பேசுவதில் தவறில்லை, எனவே நீக்க முடியாது" என்று சபாநாயகர் உறுதியாகக் கூறிவிட்டார். த.வெ.க. அமைச்சர்கள் கூறிய சில அவதூறுகளை அவ்வப்போது அவைக்குறிப்பிலிருந்து நீக்கித் தன்னை ஜனநாயகவாதியாகக் காட்டிக்கொண்ட சபாநாயகர், முதல்வரின் பேச்சிலிருந்த வன்மம் நிறைந்த பச்சைப் பொய்களையும் அவைமரபு மீறிய பேச்சுகளையும் "பொதுவெளியில் இருப்பவைதானே?" எனக் கடந்து செல்கிறார்.

பொதுவெளியில் இருப்பவையெல்லாம் சட்டசபையில் பேசலாம் என்றால், முதல்வர் விஜய் குறித்தும், அவரது கடந்த காலம் குறித்தும், கோடநாடு எஸ்டேட்டில் கைகட்டி நின்றது குறித்தும் பொதுவெளியில் இருக்கும் எத்தனையோ விஷயங்களைச் சட்டசபையில் பேச சபாநாயகர் அனுமதிப்பாரா?

## அவதூறு செய்ய முதலமைச்சருக்கு தனி உரிமையா? :

ஆதவ் அர்ஜூனா ஏதேனும் ஓர் அவதூறைச் சொல்வார்; உடனே எதிர்ப்புத் தெரிவித்துத் தி.மு.க.வினர் எழுந்து நிற்பார்கள் அல்லது குரல் கொடுப்பார்கள். உடனே அவர், "நாங்கள் எழுந்து நின்றால் என்னாகும் தெரியுமா? நாங்கள் குரல் எழுப்பினால் என்னாகும் தெரியுமா?" என்று தன் பின்னால் இருக்கும் த.வெ.க. உறுப்பினர்களைக் காட்டி மிரட்ட முயல்வார்.

உடனே சபாநாயகர், "வேண்டாம்... வேண்டாம்..." எனச் சமாதானப்படுத்துவார். த.வெ.க. உறுப்பினர்கள் அமைதியாக உட்கார்ந்திருப்பார்கள்.

> **"தனக்கென வரலாறு எதுவும் இல்லாதவர்கள் பிறரது வரலாறுகளைத் திரிப்பார்கள்; அல்லது இழிவுபடுத்துவார்கள். அதை அழிக்க முயற்சிப்பார்கள். ஜவஹர்லால் நேருவின் வரலாற்றை மோடி எப்படி அழிக்க விரும்புகிறாரோ, அதேபோலத் தான் கலைஞரின் வரலாற்றையும் தி.மு.க. தலைவரின் வரலாற்றையும் விஜய் அழிக்க ஆசைப்படுகிறார்."**

இதன் பின்னணியில் உள்ள 'திரைக்கதை' என்னவென்றால் த.வெ.க. அமைச்சர்களைத் தனிநபர் தாக்குதல் செய்யவும் அவதூறு பரப்பவும் தொடர்ந்து அனுமதிப்பது; அதைத் தி.மு.க. உறுப்பினர்கள் எதிர்க்க முயன்றால் உடனே, "அடிக்க வருகிறார்கள்; எங்களைப் பேசவிடாமல் செய்கிறார்கள்; நாங்கள் பாருங்கள் எவ்வளவு அமைதியாக இருக்கிறோம்" என த.வெ.க. அமைச்சர்களை நடிக்கவிட்டு தி.மு.க.வினர் வன்முறையாளர்கள் போல ஒரு பொய்த் தோற்றத்தை உருவாக்குவது.

**இந்த நாடகத்தின் உச்சக்கட்டம்தான் கூட்டத்தொடரின் இறுதி நாளில் நிகழ்ந்தது. முதல்வர் விஜய்யின் ஆதாரமற்ற அவதூறுப் பேச்சை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வலியுறுத்திய தி.மு.க. உறுப்பினர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். கூட்டத்தொடர் முழுக்க அவ்வப்போது த.வெ.க. அமைச்சர்களின் அவதூறுப் பேச்சுகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிய சபாநாயகர் அந்தப் பேச்சுகளைவிட பல மடங்கு மோசமான முதல்வர் விஜய்யின் பேச்சை அப்படியே ஏற்கிறார் எனில் அவையை நடத்துவதில் இவரது அளவுகோல்தான் என்ன? அவதூறு செய்வதில் முதலமைச்சருக்கு மட்டும் ஏதேனும் தனியுரிமை இருக்கிறதா?**

திரைப்படங்களில் குற்றத்தை விசாரிக்கும் போலீஸ் அதிகாரியே கடைசியில் வில்லனாக வெளிப்படும் திரைக்கதையை எத்தனையோ முறை பார்த்திருக்கிறோம். இப்போது அதைச் சட்டமன்றத்திலும் பார்க்கிறோம்.

## வரலாற்றை அழிப்பவர்களின் வழிமுறை:

'தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் மிசாவில் கைது செய்யப்படவில்லை' என்ற பொய், ஒருகாலத்தில் பா.ஜ.க.விற்காக ஊழியம் செய்து, இப்போது தலைமறைவாக இருக்கும் ஒரு 'பிளாக்மெயில்' ஊடகவியலாளர் பரப்பிய கட்டுக்கதை. பின்னர் அ.தி.மு.க.வில் அமைச்சராக இருந்த மா.ஃபா. பாண்டியராஜன் அந்தப் பொய்யை வழிமொழிந்து பேசினார். தி.மு.க. அதை அப்போதே எதிர்த்து அம்பலப்படுத்தியது.

பா.ஜ.க.வின் வழியில் ஆட்சி செய்துவரும் முதலமைச்சர் விஜய்யும், அதே பா.ஜ.க. வழியில் வந்த அமைச்சர் நிர்மல் குமாரும் அந்தப் பச்சைப் பொய்யை மீண்டும் சட்டமன்றத்திலேயே கூறியிருப்பது இந்தக் கட்டுக்கதையின் தொடர்ச்சியே.

**இந்தப் பொய்யை மறுத்து, மேனாள் நீதியரசர் கே.சந்துரு அவர்கள், தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் மிசா கொடுமைகளை அனுபவித்ததை 'இஸ்மாயில் கமிஷன்' அறிக்கையின் அடிப்படையில் உறுதிபடச் சான்றளித்திருக்கிறார். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் எமர்ஜென்சி எதிர்ப்புப் போராட்ட வரலாற்றை (Legacy) மறைக்க வேண்டும் என்ற தொடர் சதியின் ஒரு அங்கம்தான் விஜய்யின் பேச்சும் அவரது அமைச்சர்களின் பேச்சும்.**

தனக்கென வரலாறு எதுவும் இல்லாதவர்கள் பிறரது வரலாறுகளைத் திரிப்பார்கள்; அல்லது இழிவுபடுத்துவார்கள். அதை அழிக்க முயற்சிப்பார்கள். ஜவஹர்லால் நேருவின் வரலாற்றை மோடி எப்படி அழிக்க விரும்புகிறாரோ, அதேபோலத்தான் கலைஞரின் வரலாற்றையும் தி.மு.க. தலைவரின் வரலாற்றையும் விஜய் அழிக்க ஆசைப்படுகிறார்.

**காக்கைகள் குறுக்கே பறப்பதால் சூரியனின் ஒளி மறைந்துவிடுவதில்லை!**

---

### பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டுவதற்கு

# 9 மீனவ கிராம மக்கள் கடும் எதிர்ப்பு!

## பொதுநல அமைப்புகளும் போராட முடிவு!

சென்னை, செப். 11 –

சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிதாக தலைமைச் செயலகம் கட்ட உள்ள பகுதிக்கு தெற்கில் முள்ளிக்குப்பம், சீனிவாசபுரம் உள்ளிட்ட மீனவ கிராமங்கள் உள்ளன.

வடக்குப் பகுதியில் ராஜீவ் காந்தி நகர், பவானி குப்பம், இருதயபுரம், செல்வராஜ்புரம், டூமிங் குப்பம், நொச்சி நகர், நொச்சிக்குப்பம் ஆக மொத்தம் 9 குடியிருப்பு பகுதிகள் இரு மருங்கிலும் ஒரு கிலோ மீட்டருக்கு உள்ளாகவே உள்ளன. இங்கு வசிக்கும் பெரும்பாலானோர் மீனவ மக்கள்.

புதிய தலைமைச் செயலகம் அமையும் பட்சத்தில் தங்களுடைய வாழ்வாதாரம் அடியோடு பாதிக்கப்படும் என்று இவர்கள் அச்சமடைந்துள்ளனர். பட்டினப்பாக்கம், சாந்தோம், மயிலாப்பூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய இடம் பள்ளி மண்டலம் என்று அழைக்கப்படுகிறது.

இங்கு புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி, பான்சகர்ஸ் பள்ளி, சாந்தோம் மேல்நிலைப்பள்ளி, மான்போர்ட் மெட்ரிகுலேசன் பள்ளி, செயின்ட் பீட்ஸ் பள்ளி, ரோசரி மெட்ரிகுலேசன் பள்ளி, புனித ரப்பேல்ஸ் பள்ளி ஆகியவை உள்ளன. 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் இப்பள்ளிகளில் பயில்கின்றனர்.

வார நாட்களில் காலையிலும் மாலையிலும் பள்ளி மாணவ, மாணவியர் அலைமோதுவதால், புதிய தலைமைச் செயலகம் கட்ட திட்டமிட்டுள்ள பகுதிக்கு மேற்கில் உள்ள சாந்தோம் நெடுஞ்சாலையும், கிழக்கில் உள்ள கடற்கரை லூப் சாலையும் ஒருவழிப்பாதைகளாக மாற்றப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தான் ஏற்கனவே ஆட்சி புரிந்த தி.மு.க., அ.தி.மு.க. அரசுகள் பட்டினப்பாக்கத்தை தேர்வு செய்யவில்லை. களநிலவரத்தை கருத்தில் கொள்ளாமல் இடத்தை மட்டும் கணக்கில் கொண்டு தலைமைச் செயலத்தை இங்கு கட்ட த.வெ.க. அரசு முடிவு செய்துள்ளதாக இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். அரசின் முடிவு பத்திரிகைகள் வாயிலாக வெளியானவுடன் ஒன்பது கிராம மீனவ மக்களின் பிரதிநிதிகளும் அவசரமாகக் கூடி விவாதித்தனர்.

மேலும் வரும் 15ம் தேதி சீனிவாசபுரத்தில் அனைத்து மீனவ அமைப்புகளின் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. இந்த 9 கிராமங்கள் தவிர பழவேற்காடு முதல் கோவளம் வரை உள்ள மீனவ மக்களின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் தமிழக அரசு இந்த முடிவை கைவிடக்கோரி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. அரசு மறுக்கும் பட்சத்தில் தொடர் போராட்டங்கள் நடத்த முடிவு செய்யப்படும்.

மேலும் மயிலாப்பூரில் உள்ள பல்வேறு பொதுநல அமைப்புகளுடன் மீனவ மக்களின் பிரதிநிதிகள் பேசி வருகின்றனர். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படும் பிரச்சினை என்பதால் தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர் என்று மீனவர் சங்கத் தலைவர்கள் கூறினர். எனவே மீனவ மக்கள் மற்றும் உள்ளூர் மக்களின் பெரும் அதிருப்தியை சம்பாதிக்கும் முன் தமிழக அரசு தலைமைச் செயலகம் கட்டும் முடிவை கைவிட வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.